## ஒன்றிய அரசு நடத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட மூடு விழாவிற்கு

# பழனிசாமி வரவேற்பு பத்திரம் வாசிப்பதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, டிச. 19 -**

**“ஒன்றிய அரசு நடத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட மூடு விழாவிற்கு பழனிசாமி வரவேற்பு பத்திரம் வாசிப்பது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகமாகும்” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறது ஒன்றிய பா.ஜ.க.; அதற்கு ஒத்து ஊதுகிறார் திருவாளர் பழனிசாமி! #VBGRAMG திட்டத்தில் 125 நாட்கள் வேலை என்பது ஏமாற்று வேலையே!

100 நாட்கள் வேலை உத்தரவாதம் என்று சட்டம் இருந்தபோதே, பா.ஜ.க. ஆட்சியில் மக்களுக்கு 20 முதல் 25 நாட்கள் மட்டுமே வேலை கிடைத்தது. அதற்கான ஊதியத் தொகையையும் திட்டச் செலவையும் மாதக் கணக்கில் விடுவிக்காமல் வஞ்சித்தனர். அந்த நிலுவைத் தொகையையும் நாம் போராடிப் பெற வேண்டிய அவலம்தான் இருந்தது.


### நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு பேரிழப்பை சந்திக்கும்!

தற்போது, ஒன்றிய அரசின் விருப்பத்தின் பேரில் அதிகாரிகள் விரும்பினால் வேலை வழங்கலாம் என்று விதிகள் மாற்றப்பட்ட பிறகு, ஓரிரு நாட்கள் வேலை கிடைப்பதே அரிதாகப் போகிறது. நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு பேரிழப்பைச் சந்திக்கப் போகிறது.

திட்டச் செலவில் 40% தொகையை மாநிலங்கள் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனை, #GST வரி மாற்றங்களுக்குப் பிறகு கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வரும் மாநில அரசுகளுக்குத் தரப்படும் சுமை; தண்டனை!

கிராமப்புறப் பெண்கள், ஏழை விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றி வந்த #MGNREGA திட்டத்துக்கு மூடுவிழா நடத்துவதற்குத் திருவாளர் பழனிசாமி அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசிப்பது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.






சென்னை, சைதாப்பேட்டை, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தில் நேற்று (18.12.2025), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் சென்னை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக நாடகத்துறை இணைந்து நடத்தும் ”இந்தியத் தமிழ்ச் சங்கங்களின் பணிகளும் பங்களிப்புகளும்” என்ற தேசிய கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து, தலைமையுரையாற்றினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் – முனைவர் ந.அருள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

### மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 21.12.2025 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18.12.2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்கத் தயாராகிறது

முரசொலி
பொங்கல் மலர்
2026

ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...

விலை ரூ.150/-

